# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# எட்டாம் பத்து

## இரண்டாம் திருவாய்மொழி - நங்கள் வரிவளை
## ஆழ்வார் தாம் தம் ஆத்மாவிலும், அதைச் சேர்ந்தவற்றிலும் ஆசையற்றுப் போனதை, தலைவனை நோக்கிச் செல்லக் கருதிய தலைவி பேச்சாலே அருளிச் செய்தல்

** நங்கள் வரி வளை ஆயங்காளோ! *
நம்முடை ஏதலர் முன்பு நாணி *
நுங்கட்கு யான் ஒன்று உரைக்கும் மாற்றம் *
நோக்குகின்றேன் எங்கும் காண மாட்டேன் **
சங்கம் சரிந்தன சாய் இழந்தேன் *
தட முலை பொன் நிறமாய்த் தளர்ந்தேன் *
வெங்கண் பறவையின் பாகன் எங்கோன் *
வேங்கட வாணனை வேண்டிச் சென்றே 1

வேண்டிச் சென்று ஒன்று பெறுகிற்பாரில் *
என்னுடைத் தோழியர் நுங்கட்கேலும் *
ஈன்டு இது உரைக்கும் படியை அந்தோ! *
காண்கின்றிலேன் இடராட்டியேன் நான் **
காண் தகு தாமரைக் கண்ணன் கள்வன் *
விண்ணவர் கோன் நங்கள் கோனைக் கன்டால் *
ஈண்டிய சங்கும் நிறைவும் கொள்வான் *
எத்தனை காலம் இளைக்கின்றேனே? 2

காலம் இளைக்கில் அல்லால் * வினையேன்
நான் இளைக்கின்றிலன் கண்டு கொண்மின் *
ஞாலம் அறியப் பழி சுமந்தேன் *
நன்னுதலீர்! இனி நாணித் தான் என்? **
நீல மலர் நெடுஞ்சோதி சூழ்ந்த *
நீண்ட முகில் வண்ணன் கண்ணன் கொண்ட *
கோல வளையொடு மாமை கொள்வான் *
எத்தனை காலமும் கூடச் சென்றே 3

கூடச் சென்றேன் இனி என் கொடுக்கேன்? *
கோல் வளை நெஞ்சத் தொடக்கம் எல்லாம் *
பாடு அற்றொழிய இழந்து வைகல் *
பல் வளையார் முன் பரிசு அழிந்தேன் **
மாடக் கொடி மதிள் தென் குளந்தை *
வண் குடபால் நின்ற மாயக் கூத்தன் *
ஆடல் பறவை உயர்த்த வெல்போர் *
ஆழி வலவனை ஆதரித்தே 4

ஆழி வலவனை ஆதரிப்பும் * ஆங்கவன்
நம்மில் வரவும் எல்லாம் *
தோழியர்காள்! நம்முடையமே தான்? *
சொல்லுவதோ இங்கு அரியது தான் **
ஊழி தோறூழி ஒருவன் ஆக *
நன்கு உணர்வார்க்கும் உணரல் ஆகா *
சூழல் உடைய சுடர் கொள் ஆதித் *
தொல்லை அஞ்சோதி நினைக்குங்காலே 5

தொல்லை அஞ்சோதி நினைக்குங்கால் * என்
சொல் அளவு அன்று இமையோர் தமக்கும் *
எல்லை இலாதன கூழ்ப்புச் செய்யும் *
அத்திறம் நிற்க எம் மாமை கொண்டான் **
அல்லி மலர்த் தண் துழாயும் தாரான் *
ஆர்க்கு இடுகோ இனிப் பூசல்? சொல்லீர் *
வல்லி வள வயல் சூழ் குடந்தை *
மா மலர்க் கண் வளர்கின்ற மாலே 6

மால் அரி கேசவன் நாரணன் * சீமாதவன்
கோவிந்தன் வைகுந்தன் என்றென்று *
ஓலம் இட என்னைப் பண்ணி விட்டிட்டு *
ஒன்றும் உருவும் சுவடும் காட்டான் **
ஏல மலர்க் குழல் அன்னைமீர்காள்! *
என்னுடைத் தோழியர்காள்! என் செய்கேன்? *
காலம் பல சென்றும் காண்பது ஆணை *
உங்களோடு எங்கள் இடை இல்லையே 7

இடை இல்லை யான் வளர்த்த கிளிகாள்! *
பூவைகள்காள்! குயில்காள்! மயில்காள்! *
உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும் *
ஒன்றும் ஒழிய ஒட்டாது கொண்டான் **
அடையும் வைகுந்தமும் பாற்கடலும் *
அஞ்சன வெற்பும் அவை நணிய *
கடை அறப் பாசங்கள் விட்ட பின்னை
அன்றி * அவன் அவை காண் கொடானே 8

காண் கொடுப்பான் அல்லன் ஆர்க்கும் தன்னைக் *
கை செய் அப்பாலதோர் மாயம் தன்னால் *
மாண் குறள் கோல வடிவு காட்டி *
மண்ணும் விண்ணும் நிறைய மலர்ந்த **
சேண் சுடர்த் தோள்கள் பல தழைத்த *
தேவ பிராற்கு என் நிறைவினோடு *
நாண் கொடுத்தேன் இனி என் கொடுக்கேன்? *
என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள்! 9

என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள்! *
யான் இனிச் செய்வதென்? என் நெஞ்சு என்னை *
நின் இடையேன் அல்லேன் என்று நீங்கி *
நேமியும் சங்கும் இரு கைக் கொண்டு **
பன்னெடுஞ் சூழ் சுடர் ஞாயிற்றோடு *
பால் மதி ஏந்தி ஓர் கோல நீல *
நன்னெடுங் குன்றம் வருவது ஒப்பான் *
நாள் மலர்ப் பாதம் அடைந்ததுவே 10

** பாதம் அடைவதன் பாசத்தாலே *
மற்ற வன்பாசங்கள் முற்ற விட்டு *
கோதில் புகழ்க் கண்ணன் தன் அடி மேல் *
வண் குருகூர்ச் சடகோபன் சொன்ன **
தீதில் அந்தாதி ஓர் ஆயிரத்துள் *
இவையும் ஓர் பத்து இசையோடும் வல்லார் *
ஆதும் ஓர் தீதிலர் ஆகி * இங்கும் அங்கும்
எல்லாம் அமைவார்கள் தாமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---